சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்

# அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!



சென்னை, மார்ச் 15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (14.03.2026) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு அவர்கள் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கடாபுரத்தில் உள்ள முழு நேர கிளை நூலகத்தை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.6.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள "புதிய முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்", நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அம்பத்தூர் இரயில்வே மேம்பாலப் பணி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.1.83 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மண்டலம்-7, வார்டு-88க்குட்பட்ட பகுதிகளில் புதிய ஆரம்ப சுகாதார மையம், புதிய பேருந்து நிறுத்தம், மில்லேனியம் பூங்காவில் டென்னிஸ் மைதானம் அமைத்தல், பல்வேறு தெருக்களில் புதிய பெயர் பலகைகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி.ஆர். பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் சந்திரசேகர் சாகமூரி, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் பி.கே.மூர்த்தி, நிலைக்குழு தலைவர் (பொது மருத்துவம்) டாக்டர் சாந்தகுமாரி, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) ஜவகர் முத்துராஜ், கண்காணிப்பு பொறியாளர் ராஜதுறை, சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. நாகவள்ளி பிரபாகரன், டி.எஸ்.பி.ராஜகோபால், திருமதி.உமா சந்தானம், டாக்டர் பூர்ணிமா, திருமதி பொற்கொடி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசையும் - அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



செஞ்சி மார்ச் 15.

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை:அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை" தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசையும் அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் இன்று (15.3.2026) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது இது குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்:

ஒன்றிய பாஜக NDA அரசின் தவறானவெளியுறவு கொள்கையினாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததின் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும், வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர்.

உணவகங்கள் வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது .சிறுகுறு தொழில்கள்உள்ள அதிக தொழில் வளம் மிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரி செய்ய வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு .க .ஸ்டாலின் அவர்கள் இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தை போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய NDA அரசு. நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி பேசவே பிரதமர் மறுத்துவருவது மற்றும் தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி,100 நாள் வேலை திட்டம் நிதி, குடிநீர் இணைப்பு நிதி, என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது கோவை, மதுரை,மெட்ரோ ரயில் திட்டம், ஒசூர் விமான நிலையம் என எந்த ஒரு வளர்ச்சி திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போடுவது இந்தி மும்மொழிக் கொள்கை திணிப்பு என்ற பெயரில் தமிழ் மொழியை அழிக்க துடிப்பது கீழடி அகழாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது எனத்தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் ,அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து இன்று (15.3.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், நகரம், பேரூர்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகியதொகுதிகளில் உள்ள ஒன்றிய,நகர பேரூர் அளவில் நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின்மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள்,கழக நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும்அந்தந்த பகுதிகளில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதன் அடிமை கூட்டணியையும்கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# மயிலை மேற்குப் பகுதிக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 15-

ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்து பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. கழகத்தலைவர் - முதல்வர் அவர்கள் ஆணைக்கிணங்க சென்னை தென்மேற்கு மாவட்டக்கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழிக்காட்டுதலில் ஒன்றிய பா.ஜ.க மோடி அரசின் தவறான வெளியுறவு கொள்கையால் வீடு மற்றும் வணிக சமையல் எரிவாயு கேஸ் தட்டுப்பாடு காரணமாக மக்கள் அவதிப்படுதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மயிலை மேற்கு பகுதி கழகச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் இன்று (15.02.2026 - ஞாயிற்றுக்கிழமை), காலை 9.30 மணியளவில் ஆழ்வார்பேட்டை T.T.K ரோடு , எல்டாம்ஸ் ரோடு சிக்னல் சந்திப்பு (இந்தியன் வங்கி அருகில் ) நடைபெறுகிறது.

இதில் மயிலை மேற்கு பகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டக்கழகச் செயலாளர்கள் , மாவட்ட பிரதிநிதிகள், வட்டநிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி ,வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள் (B.L.A2,) மற்றும் பாக உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்று ஆர்பாட்டத்தை வெற்றியடைய செய்யுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தெரிவித்துள்ளார்.



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் திருவொற்றியூரில் சமுதாய வளைகாப்பு விழா ஸ்ரீ சாய் மகாலில் சிறப்பாக நடைபெற்றது. திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசு பெண்களுக்கு செய்து வரும் நலத்திட்டங்களை எடுத்துரைத்து, வாழ்த்துகளை தெரிவித்தார். நிகழ்ச்சியில் மருத்துவர்கள் ஏ.செல்வ ராஜ்குமார், பிரியா செல்வராஜ் குமார், கா.பிரவீன் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகள் பராமரிப்பு, தாய்ப்பாலின் அவசியம் குறித்து ஆலோசனை வழங்கினர். இதில் கஸ்தூரி சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக கே.பி.சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை! அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை!

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# சென்னை வடகிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை. தமிழ் நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இன்று (15.03.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம்எம்.எல்.ஏ. முன்னிலையில்நடைபெற உள்ளது. மேற்படி ஆர்ப்பாட்டத்தில் திரு.முபாரக் (எஸ்.டி.பி.ஐ), டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் பகுதி, ஒன்றிய, பேரூர் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | கழக அமைப்பு பகுதி–ஒன்றியம்–பேரூர் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1 | மாதவரம் தெற்குபகுதி, புழல் ஒன்றியம், செங்குன்றம் பேரூர், | மாதவரம் பஜார் | மாதவரம் S.சுதர்சனம் M.A.B.L.,M.L.A., மாவட்ட செயலாளர்<br>G.துக்காராம் – பகுதி கழக செயலாளர்<br>C.அற்புதராஜ் – ஒன்றிய கழக செயலாளர்<br>D.சுதாகர் – பேரூர் கழக செயலாளர் மற்றும்<br>அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் |
| 2 | சோழவரம் ஒன்றியம் | காரனோடை பஜார் | மீ.வே.கருணாகரன் ஒன்றிய கழக செயலாளர் மற்றும்<br>அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் |
| 3 | வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் | புதிய கன்னியம்மன் நகர் பேருந்து நிலையம் அருகில் மோரை ஊராட்சி | G.தயாளன் ஒன்றிய கழக செயலாளர் மற்றும்<br>அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் |
| 4 | மாதவரம் வடக்கு பகுதி | மாத்தூர் பிரதான சாலை | புழல் நாராயணன் – பகுதி கழக செயலாளர் மற்றும்<br>அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் |
| 5 | திருவொற்றியூர் தொகுதி | திருவொற்றியூர் தபால் நிலையம் அருகில் | திரு.முபாரக் (எஸ்.டி.பி.ஐ)<br>K.P.சங்கர் MLA.,<br>திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர்<br>தி.மு.தனியரசு பகுதி கழக செயலாளர்,<br>1வது மண்டல குழு தலைவர்<br>V.ஆறுமுகம் – பகுதி கழக செயலாளர்<br>2வது மண்டல குழு தலைவர்<br>வை.ம.அருள்தாசன் –பகுதி கழக செயலாளர் மற்றும்<br>அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் |

மேற்படி கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மாதவரம் தொகுதி பார்வையாளர் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2-க்கள், BLC பாகப் பணியாளர்கள், BYA, BDA-க்கள், கழகத் தோழர்கள் என அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**

செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# 40வது வார்டில் முதல்வர் பிறந்தநாள் - 1000 பேருக்கு நல உதவிகள் வழங்கல்!

## நா.கோதண்டம் தலைமை! இரா. லட்சுமணன் – எஸ்,ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலை!

சென்னை, மார்ச் 15-

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழக தலைவர்-முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வட்டச் செயலாளர் நா.கோதண்டன் தலைமையில் பகுதிச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது..

மார்ச் 1 கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர்MLA ஏற்பாட்டில், 40வது வட்ட செயலாளர் நா.கோதண்டம் தலைமையில், பகுதி கழக செயலாளர்கள் இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலையில், வட்டம் 40 H.L.L.நகர் திட்டப்பகுதியில் 12.03.2026 மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் ஆர்.வெற்றி வீரன்,மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் என்.மருது கணேஷ், மண்டலக்குழு தலைவர் நேதாஜி.யு.கணேசன், பகுதி நிர்வாகிகள், என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, M.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம.லோகநாதன், திராவிட செல்வி, பி.சீனிவாசன், மாவட்ட அமைப்பாளர்கள்: ஏ.டி.மணி, விமலா, வி.வி.ரமேஷ், எஸ்.எம். பரசுராமன், மோகன், ஒளி ஒலி பாபு, கலைவாணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: இர.பொன்இளவரசன், வெ.சு.சத்தியநாராயணன், இ.ரவிக்குமார், வட்ட செயலாளர்கள்: மா.நாகராஜ், ன்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், ப.குமார், சா.தமிழ்செல்வன், பொ.து.ராஜா,ஜெ.பிரேம் ஆனந்த்,எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம். சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள்,

மாவட்ட,பகுதி,வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட,பகுதி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மார்ச்1 கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர், ஜே.ஜே.எபினேசர் நிகழ்ச்சி ஏற்பாட்டில், ஆர்.கே.நகர் தொகுதி வார்டு–40 சுனாமி குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் என்.மருது கணேசன், மண்டலக்குழு தலைவர் நேதாஜி.யு.கணேசன், வட்ட கழக செயலாளர் நா.கோதண்டம், மாமன்ற உறுப்பினர், மாநில,மாவட்ட,பகுதி,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.